

கேரள மாநிலம், ஆலப்புழாவில் உள்ள அரூகுற்றியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, கேரள மாநில மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் சஜி செரியான், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில், நேற்று முன்தினம் (26.09.2025) "தந்தை பெரியார்" நினைவக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், கேரள மாநில நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஆலப்புழா மாவட்ட ஆட்சித் தலைவர் அலெக்ஸ் வர்கீஸ், மற்றும் இரு மாநில அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக இணைவேந்தருமான மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (26.09.2025) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக கூட்டரங்கில் பல்கலைக்கழக ஆராய்ச்சி நாளை முன்னிட்டு மருத்துவ ஆசிரியர்கள், முதுநிலை மற்றும் இளநிலை மருத்துவ மாணவர்களுக்கு சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார். இதில் அதிகாரிகள், மாணவர்கள் உடனிருந்தனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் நினைவெல்லாம் தந்தை பெரியார்தான்!

# இந்தியாவிலேயே முதன்முதலாக தீண்டாமைக்கு எதிராக வித்திட்ட மண் வைக்கம்!

## கேரளாவில் ஆறுகுட்டி சிறையை தந்தை பெரியார் நினைவகமாக அமைத்திட அடிக்கல் நாட்டி அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

**வைக்கம், செப்,26–**

**தந்தை பெரியார், கேரள மாநிலம், வைக்கம் போராட்டத்தில், முதல் முறையாக கைதாகி சிறை வைக்கப் பட்டிருந்த ஆறுகுட்டி சிறையை – தந்தை பெரியார் நினைவகமாக அமைத்திட – பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அடிக்கல் நாட்டினார்கள்.**

தந்தை பெரியார், கேரளா மாநிலம், வைக்கம் போராட்டத்தில் கைதாகி சிறை வைக்கப்பட்டிருந்த, ஆறுகுட்டி சிறையை - முதலமைச்சர் அவர்களின் அறிவுரை யின்படி, தந்தை பெரியார் நினைவகமாக அமைத்திடும் பொருட்டு - நேற்று முன் தினம் (26.09.2025) கேரளா மாநிலம், வைக்கத்தில், கேரள மீன்வளம், கலாச்சா ரம் மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் சஜி செரியான் தலைமையில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னி லையில், பொதுப்பணிகள், நெடுஞ்சா லைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அடிக்கல் நாட்டினார்கள்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், அடிக் கல் நாட்டு விழாவை தொடர்ந்துஉரை யாற்றினார்.

முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய ஆட்சிக்கு "திராவிட மாடல் அரசு" என்று பெயரிட்டு ஆட்சி செய்து கொண்டிருக்கி றார். "திராவிட மாடல் அரசு" என்பது "எல்லோருக்கும் எல்லாம்" கிடைக்க வேண்டும் என்பதே. இந்த ஆட்சியின் நோக்கம், எண்ணங்களை, திட்டங் களை வகுக்க வேண்டுமென்றால், மூன்று மூலவர் தந்தை பெரியார், பேரறி ஞர் அண்ணா, என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற முத்தமி ழறிஞர் கலை ஞர். இந்த மூன்று மூலவர்களு டைய, நோக்கங்கள், எண்ணங்கள் நிறைவேற் றுகின்ற ஆட்சிதான் "திராவிட மாடல் அரசு" என்று முதலமைச்சர் ஆட்சி நடத்தி கொண்டிருக்கிறார். அந்த வகையில் தான், மூலவர் என்று சொல்லப்பட்ட மூவர்களில், முதலானவர் தந்தை பெரி யார். "உலகத் தலைவர்" என்று போற்றப் படுகின்ற வகையில் அவருக்கு நினைவ கம் அமைப்பது, சிலைகள் அமைப்பது, அவருடைய பிறந்த நாள் விழாவை, தமிழ்நாடு எங்கு கொண்டாடுவது என்ற அடிப்படையில், இன்றைக்கு தந்தைப் பெரியார் அவர்களுக்கு கேரளா மாநிலம், வைக்கத்தில் "ஆறுகுட்டியில் உள்ள சிறையை தந்தை பெரியார் நினைவ கமா" அமைக்க இன்று அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுள்ளது.

கேரளா மாநிலம் வைக்கத்தில் மஹா தேவர் கோயில் அமைந்துள்ள நான்கு சாலைகளிலும்,தெருக்களிலும் தாழ்த்தப் பட்ட மக்கள் நடக்கக் கூடாது என்று கடந்த காலக்கட்டத்தில், கட்டுப்பாடு நீண்ட கால மாக இருந்து வந்தது. அங்கிருந்த தாழ்த் தப்பட்ட மக்கள், மற்றவர்களும் வேத னைபட்டு, சுயமரியாதை உணர்ச்சி கொண்டனர். தெருவில் நடக்கும் உரிமை பெற, ஒரு சத்தியாக்கிரக போராட் டத்தைத் தொடங்கினார்கள். அந்தப் போராட்டத்தில், போராட்ட குழுத் தலை வர் ஜார்ஜ் ஜோசப் உள்பட 19 பேர் கைது செய்யப்பட்டனர்.

**வைக்கத்திலிருந்து பெரியாருக்கு அனுப்பப்பட்ட கடிதம்!**

அதன் பின்னர், தலைவர் இல்லாத காரணத்தால் போராட்டம் நின்றுவிடும் நிலை ஏற்பட்டது. சிறையில் இருந்தப டியே, ஜார்ஜ் ஜோசப்பும், குரூர் நீலகண்ட நம்பூதிரியும் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட் சியின் தலைவராக இருந்த தந்தை பெரி யார் அவர்களுக்கு அவசரம் அவசரமாக ஒரு கடிதம் எழுதினர்.

அந்த கடிதத்தில், "பெரிய போராட் டத்தை தொடங்கி விட்டோம்; அடக்கு முறை பலமாக உள்ளது; தாங்கள் உடனே வைக்கத்திற்கு வருகை தந்து, போராட்டத்தை ஏற்று நடத்தினால்தான், கேரளத்தினுடைய மானமும், எங்களு டைய மானமும் மிஞ்சும்; உடனே தாங் கள் வர வேண்டுகிறோம்" என்று ஜெயி



லில் இருந்தபடியே இரகசியமாக ஆள் மூலம் கடிதம் கொடுத்தனுப்பினார்கள். வைக்கத்திலிருந்து அனுப்பப்பட்ட அந்தக் கடிதம் பெரியாருக்கு கிடைத்தது.

உடனே அன்னை நாகம்மையாரிடம் சொல்லிவிட்டு, படுக்கை, துணிமூட்டை முதலிய வற்றைச் சற்றுப் பெரிதாகவே கட் டிக் கொண்டு அன்றிரவே வைக்கத்திற்குப் புறப்பட்டு விட்டார். மறுநாள் பகல் 2.00 மணிக்கு வைக்கம் போய் சேர்ந்தார். போராட்டத்திற்கு உடனே தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். கேரளா வில் அருகில் இருந்த கிராமங்க ளுக்குச் சென்று, மக்களை ஒன்று திரட்டி போராட் டம் நடத்தினார். இப்போராட்டத்தில் தந்தை பெரியாரும் தோழர் அய்யாமுத்துவும் சிறைப்பட்டனர். கைதான தந்தை பெரி யார், 22.4.1924-இல் ஒருமாத காலம் தண்டனை பெற்று, இந்த ஆறுகுட்டி சிறை யில் அடைக்கப்பட்டார். சிறையில் அடைக் கப்பட்ட காலம் 100 ஆண்டுகளுக்கு முற் பட்ட காலம். ஒரு மாத காலம் கழித்து விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையானவுடன், தந்தை பெரி யார், "எந்த நோக்கத்திற்காக கேரளா, வைக்கம் வந்தனோ, அந்த நோக்கம் நிறைவேறும் வரையில் போராடுவேன்" என்று மீண்டும் போராடியதால், ஒரு வாரத்தில் தந்தை பெரியார் மறுபடியும் கைது செய்யப்பட்டார். அப்பொழுது, ஆறு மாதம் தண்டிக்கப்பட்டுத் திருவாங்கூர் சென்ட்ரல் ஜெயிலில் கடுங்காவல் கைதி யாக வைக்கப்பட்டார். தந்தை பெரியார் முதல்முறை சிறைப்பட்டு, ஆறுகுட்டி சிறையில் அடைக்கப்பட்டவுடன், அவரது துணைவியார் அன்னை நாகம்மை யார், தோழர் எஸ்.ராமநாதன் அவர்களு டன் ஈரோட்டிலிருந்து வைக்கம் வந்து சேர்ந்தார்.

பின்னர் அன்னை நாகம்மையார் இதில் முக்கிய பங்கு கொண்டார். அச்சம யம் தமிழ்நாட்டில் இருந்தும், கேரளாவில் இருந்தும் ஏராளமான பெண்கள் இக்கி ளர்ச்சியில் பங்கு கொண்டனர். அந்த வேளையில், ஒரு மாதமானதும் தந்தை பெரியார் விடுதலையானார்.

விடுதலை ஆனவுடன் அவருக்கு நாடு கடத்தல் உத்தரவு போடப்பட்டது. தந்தை பெரியார் அந்த நாடு கடத்தல் உத்தரவை யும் மீறி போராடினார். அதனால், மறுபடி யும் கைது செய்யப்பட்டு, ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, திருவாங்கூர் மத்திய சிறையில் அடைக் கப்பட்டார். இறுதியில் சத்தியாக்கிரகப் போராட்டம் வெற்றி பெற்றது. தாழ்த்தப் பட்ட மக்களுக்குத் தெருவில் நடக்கும் உரிமை வழங்கப்பட்டது. "எந்த நோக்கத் திற்காக தந்தைபெரியார் கேரளா வைக் கம் வந்தாரோ, அந்த நோக்கம் நிறைவே றியது. பிறகு தமிழ்நாட்டிற்கு வந்தார். தீண்டாமை ஒழிப்பிற்காக இந்தியாவி லேயே முதன்முதல் போராட்டம் நடை பெற்று, வெற்றி பெற்றது இந்த வைக்கம் மண்தான்.

**இந்தியாவில் தீண்டாமை தலைவிரித்தாடியது!**

அதுவரை "தீண்டாமை" என்பது இந்தி யாவிலேயே தலைவிரித்தாடியது. இதற்கு எதிராக வித்திட்ட மண்தான் கேர ளாவில் உள்ள வைக்கம் என்றால் அது மிகையாகாது.

இந்த வைக்கம் போராட்டத்தின் பின் னர்தான் கோவில் நுழைவு கிளர்ச்சி எங் கும் நடைபெற்று, திருவாங்கூர் கோவில் கள் எல்லாத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் திறந்து விடப்பட்டது. இதனால், வைக்கம் போராட்டம் நாடெங்கும் புகழ் பெற்றுவிட் டது.

இதனால் தந்தை பெரியார் அவர்க ளுக்கு, "வைக்கம் வீரர்" என்ற பெயரே நிலைத்து விட்டது. இன்று, "வைக்கம் வீரர்" என்றால் போதும், தந்தை பெரியார் அவர்களை எல்லோரும்நன்றாக அறி வார்கள்.

தீண்டாமையை எதிர்த்து நடைபெற்ற வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்வ தற்காக தந்தை பெரியார் 7 முறை கேர ளாவிற்கு வந்துள்ளார். வைக்கம் போராட் டத்தில் கலந்துகொண்ட தந்தை பெரியார் இரண்டு முறை கைது செய்யப்பட்டுள் ளார். முதல் முறை கைது செய்யப்பட்ட போதுதான், ஒரு மாத காலம் தண்டனை யில் இந்த ஆறுகுட்டி சிறையில் வைக் கப்பட்டிருந்தார். இந்த இடத்தில் ஒரு சிறைச்சாலையை போல நினைவு சின் னம் அமைக்க வேண்டும் என்று முதல மைச்சர் கருத்து தெரிவித்தார்.

**வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா!**

வைக்கம் போராட்ட வெற்றியின் நூற் றாண்டு விழா கடந்த ஆண்டு 12.12.2024 அன்று வைக்கத்தில் நடை பெற்றபோது, முதலமைச்சர் உத்தரவு படி,வைக்கத்தில் தமிழ்நாடு அரசு சார் பில், கட்டப்பட்டுள்ள தந்தை பெரியார் நினைவகம் ரூ.8.14 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு, புதியதாக நூலகம் ஒன் றும் கட்டித் திறந்து வைக்கப்பட்டது.அந்த மாபெரும் விழாவில் முதல மைச்சர் அவர்களும், கேரளா மாநில முதல மைச் சர் பினராயி விஜயன் அவர்களும் கலந்து கொண்டு, சிறப்பித்ததை அமைச்சர் நினைவு கூர்ந்தார்.

மேலும், நினைவகம் திறப்பு விழாவில் கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் சஜி செரியான் முழு ஒத்துழைப்பு வழங்கி னார்கள். தற்போது, தந்தை பெரியார் நூலகத்தை யும், நினைவகத்தையும் 12,737 பேர் பயன்படுத்திவுள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 12.12.2024 அன்று, மாணபுமிகு கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களிடம், தந்தை பெரியார் சிறை வைக்கப்பட்ட இடத்தில் நினைவ கம் அமைக்க வேண்டுமென் கோரிக்கை வைத்தார். அதன் தொடர்ச்சியாக, கேரளா மாநில அரசாங்கம் 0.58 சென்ட் நிலத்தை எந்தவித கட்டணமுமின்றி, தமிழ்நாடு அரசிடம் ஒப்படைத் துள்ளது.

மேலும், முதலமைச்சர் அவர்கள், தந்தை பெரியாரின் புகழ் உலகளாவிய புகழாக நிலைத்து நிற்க, இலண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில், தந்தை பெரியாரின் படத்தை திறந்து வைத்து பெருமைப்படுத்தியுள்ளார்.முதல மைச்சர் நினைவெல்லாம் தந்தை பெரி யாதான் என்பதையும் அமைச்சர் எடுத்து ரைத்தார்.

தற்போது, தந்தை பெரியார், வைக்கம் போராட்டத்தில் முதன்முதல் 22.4.1924 அன்று கைது செய்யப்பட்டு, ஒரு மாத காலம் அடைக்கப்பட்டிருந்த இந்த ஆறு குட்டி சிறையை தந்தை பெரியார் நினை வகமாக ரூ.3.99 கோடி மதிப்பீட்டில், 1141 சதுரடி பரப்பளவில், ஐந்து மாதகாலத்தில் அமைக்கப்படுகிறது. இந்த நினைவ கத் தில், மாதிரி சிறை அமைப்பு, புகைப்பட கண்காட்சி அரங்கம், தந்தை பெரியாரின் திருவுருச் சிலை ஆகியவை இடம் பெறு கின்றன என்று பொதுப்பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித் தார்கள்.

இந்த விழாவில், கேரள மாநில ஆலப் புழா நாடாளுமன்ற உறுப்பினர் கே.சி. வேணுகோபால், அரூர் சட்டமன்ற உறுப் பினர் திருமதி தலீமா ஜோ ஜோ, ஆலப் புழா மாவட்ட ஆட்சியர் அலெக்ஸ் வர் கீஸ், தமிழ்நாடு பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், ஆறுகுட்டி கிராம பஞ்சாயத்து தலைவர் அஷ்ரப் வெல்லே ழுத், கிராம வார்டு உறுப்பினர் திருமதி வித்யா ராஜ் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

### முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா டி.சரவணன் ஏற்பாட்டில்

## புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி மக்களுக்கு இலவச ஷாமியானா - நாற்காலி சேவை!

### புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, செப். 28

புதுச்சேரி மாநிலம், முத்தி யால்பேட்டை தொகுதியில் போன் செய்தால் வீடு தேடி ஷாமியானா, நாற்காலிகள், டேபிள், ஐஸ் பாக்ஸ் வழங்கும் சேவை தொடக்க விழா நேற்று காலை நடந்தது. முத்தி யால்பேட்டை தெபசன்பேட் வீதி யில் உள்ள தி.மு.க. அலுவலகத் தில் நடந்த விழாவுக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா டி.சர வணன் தலைமை வகித்தார். தொகுதி செயலாளர் சௌரிராஜன் வரவேற்று பேசினார்.

புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தவைருமான இரா.சிவா திட் டத்தை தொடங்கி வைத்தார்.

இதில் மாநில அவைத் தலை வர் எஸ்.பி.சிவக்கு மார், செயற் குழு உறுப்பினர் திருநாவுக்கரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் அனி பால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், முன்னாள் சபாநாயகர் பழனி ராஜா, தொகுதி செயலாளர் சௌரிராஜா, அவைத் தலைவர் எழிலன், தொகுதி துணை செய லாளர் ரவி, தொகுதி பிரதிநிதி தனசேகர், தொகுதி துணை செய லாளர் கலைவாணி சண்முகம், தொகுதி செயற்குழு உறுப்பினர் வெங்கடேசன், தொகுதி செயற் குழு உறுப்பினர் செந்தில் முரு கன், மாநில நெசவாளர் அணி செயலாளர் சந்துரு, நெசவாளர் அணி துணைச் செயலாளர் நவீன், தி.மு.க. மக்கள் சேவை மையம் மதன் பாபு, பூபதி பாபு, பாஸ்கர், பிரகாஷ், ஆறுமுகம், அல்போன்ஸ், மனோகர், சண்மு கம், முருகன், விமல், ராஜ், தேசப் பன், உதயகுமார், சங்கரலிங்கம், விநாயகமூர்த்தி, ஆனந்த், கேட் ராஸ் சரவணன், ஆரோக்கிய ராஜ், திலீப், ஜீவா, மகளிர் அணி தனம், லதா, ராணி, சுந்தரி, மேரி, விமலா, லட்சுமி, அன்பரசி, செல்வி, ரீட்டா, ராஜேஸ்வரி மற் றும் மாநிலக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி களின் நிர்வாகி கள் மற்றும் பலர் கலந்து கொண் டனர்.

முத்தியால்பேட்டை தொகுதி மக்கள் 8537 929292, 8537 939393 ஆகிய எண்களை 24 மணி நேரமும் தொடர்புகொள்ள லாம். தொகுதி மக்களின் வீடுக ளில் நடைபெறும் நிகழ்ச்சி களுக்கு தேவையான ஷாமி யானா, நாற்காலிகள், டேபிள், ஐஸ்பாக்ஸ் இலவசமாக அமைத்து தரப்படும் என முன் னாள் எம்.எல்.ஏ. நந்தா சரவ ணன் தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி மாநிலம், முத்தியால்பேட்டை தொகுதியில் போன் செய்தால் வீடு தேடி ஷாமியானா, நாற்காலிகள், டேபிள், ஐஸ் பாக்ஸ் வழங்கும் சேவை தொடக்க விழா முத்தியால்பேட்டை தெபசன்பேட் வீதியில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா டி.சரவணன் தலைமையில் நடைபெற்றது. தொகுதி செயலாளர் சௌரிராஜன் வரவேற்று பேசினார். புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தவைருமான இரா.சிவா திட்டத்தை தொடங்கி வைத்தார். இதில் மாநில, தொகுதி கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சோ.துரைபாண்டியன் ஏற்பாடு! மாமன்ற உறுப்பினர் நா. சம்பத் பங்கேற்பு!

## கோவை 35 வது வட்டம் - அறிஞர் அண்ணா நகரில் இலவச மருத்துவ முகாம்!

### மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி தலைமையில் நடைபெறுகிறது!

கோவை, செப். 28 –

கோவை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாகவும், அறிஞர் அண்ணா நகர் ஸ்ரீ கம்பீர சித்தி விநாயகர் திருக்கோயிலின் சார்பாகவும், ஆரோ மல்டிஸ்பெஷாலிட்டிஹாஸ்பிடல்உடன் இணைந்து இன்று (28.9.2025 – ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை மேற்படி மருத்துவமனையின் சிறப்பு வாய்ந்த மூன்று டாக்டர்கள் உடன் இணைந்து நர்ஸ் உள்ளிட்ட டெக்னீசியன்ஸ் 13 பேர் கொண்ட குழுவினர் "அறிஞர் அண்ணா நகர் அருள்மிகு ஸ்ரீ கம்பீர சித்தி விநாயகர் திருக்கோயிலில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் நடைபெறும் இலவச மருத்துவ முகாமில் பத்து வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

வந்தபின் கஷ்டப்படுவதை காட் டிலும் வரும் முன் காப்போம் என்ற ரீதியில் பரிசோதனைகளை மேற் கொண்டு எந்த நோயிலிருந்தும் தங்களை முன்கூட்டியே தற்காத் துக் கொள்ள முடியும் என்ற உன்ன தமான நோக்கில் மேற்கண்ட இல வச மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாமினை தலைமைத் தாங்கி கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி துவக்கி வைக்கிறார். மருத்துவ மனையின் மேனேஜிங் டைரக்டர் டாக்டர் ஹசிப் கான் முன்னிலை வகிக் கிறார். மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் திருக்கோ யிலின் சுற்றுப்புறத்தை தூ ய்மைப்படுத்த உதவினார்.

பிரிண்டிங் பிரஸ் மேலாண்மை இயக்குனர் ராஜசேகர் குடும்பத்தார் துண்டுப் பிரசுரங்களை பொதுமக்க ளுக்கு கொடுத்து உதவினர்.

இலவச மருத்துவ முகாமினை மருத்துவமனை பி. ஆர்.ஓ. ரமேஷ் மந்திரி மற்றும் 35 வது வட்டக் கழக அவைத் தலைவரும், திருக் கோயிலின் அறங்காவலர் குழு தலைவருமான சோ. துரைபாண்டி யன் ஏற்பாடு செய்துள்ளனர்.




விக்கிரவாண்டி தொகுதியில் பொன்னங்குப்பம் அரசு மேல்நிலை பள்ளியில் 12 ஆம் வகுப்பு 10வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வில் 'தேர்வை வெல்வோம்' என்ற கையேட்டினை சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா வழங்கினார்.அச்சமயம் முதன்மைக் கல்வி அலுவலர் அறிவழகன், விக்கிரவாண்டி மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஜெ.ஜெயபால், அவை தலைவர் முரளி,ஊராட்சி மன்ற தலைவர் விசாலாட்சி வேலு, பெற்றோர் – ஆசிரியர் கழகத் தலைவர் அப்பாசாமி மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.